முச்சந்தி முரளி



" அப்ப மனவழுத்த மாத்திரைக்குத் தட்டுப்பாடு வந்தால் மண்ணையும் விழுங்குவினம் போல"

Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 145

வெள்ளிக்கிழமை
19 ஏப்ரல் 2024

சித்திரை 06 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055


# ஹெரோய்னுக்குப் பதிலாக மனவழுத்த மாத்திரைகள்

## ஒருங்கிணைப்புக் குழுவில் வெளிவந்த 'பகீர்' தகவல்



யாழ்ப்பாணம், ஏப். 19

ஹெய்ரோய்ன் கடத்தல் அண்மைக்காலமாக கட்டுப்படுத்தப்பட்டுள்ள பின்னணியில், ஹெரோய்னுக்கு அடிமையானவர்கள் அது கிடைக்காமையால் மனவழுத்தத்துக்குப் பயன்படுத்தும் மாத்திரைகளை பதில் பொருளாகப் பயன்படுத்தி வருகின்றனர் என்ற 'பகீர்' தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம் ☞ 11

## பாடசாலைச் சூழலில்

# மாணவர்கள் நடமாடும் நேரத்தில் கனரக வாகனங்களுக்குத் தடை!

யாழ்ப்பாணம், ஏப். 19

யாழ். மாவட்டத்தில் பாடசாலைகள் ஆரம்பமாகும் நேரத்திலும் நிறைவடையும் நேரத்திலும் பாடசாலைச் சூழலில் கனரக வாகனங்கள் போக்குவரத்தில் ஈடுபடுவதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் யாழ்ப்பாணம் ☞ 11

## வடக்கில் இவ்வருடத்தில்

# மீள்குடியேற்றம் முழுமையாகும்!

## வடமாகாண ஆளுநர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஏப்ரல் 19**

**வடமாகாணத்தில் இந்த வருடத்துக்குள் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் முழுமைப்படுத்தப்படும். ஜனாதிபதி ரணிலின் உத்தரவுக்கு அமைய இந்தச் செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்று வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.** ☞ 11

## கடற்றொழிலாளி சடலமாக மீட்பு!

யாழ்ப்பாணம், ஏப். 19

முல்லைத்தீவு, மாத்தளன் பகுதியில் கடற்றொழிலுக்குச் சென்ற மீனவர் ஒருவர் படகிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வடமராட்சி கிழக்கு, மணற்காட்டைச் சேர்ந்த 45 வயதுடைய குடும்பஸ்தரே முல்லைத் ☞ 11

# அபிவிருத்தித் திட்டங்களை ஓரிடத்தில் குவிக்காதீர்கள்!

## யாழ். ஒருங்கிணைப்புக்குழுவில் நேற்று இறுக்கமான அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஏப். 19

அபிவிருத்தித் திட்டங்களை நகரப் பகுதிகளை மையப்படுத்தியதாகக் குவிக்காமல், தீவகப் பகுதிகளையும் கருத்திற்கொண்டு பரவலாக்கம் செய்யப்படவேண்டும் என்ற இறுக்கமான அறிவுறுத்தல் யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நேற்று விடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. இதன்போது முதலீட்டு வலயங்களாக அடையாளம் காணப்பட்ட பகுதிகள் தொடர்பான கலந்துரை ☞ 11

## இந்தியாவில்

# இன்று தேர்தல் ஆரம்பம்

சென்னை, ஏப். 19

இந்திய மக்களவைத் தேர்தல் இன்று ஆரம்பிக்கின்றது. தமிழகத்தில் இன்று ஒரேநாளில் வாக்குப் பதிவுகள் இடம்பெறவுள்ளன. ☞ 11

# ஈரான் ஜனாதிபதியின் பயணம் ரத்தாகலாம்!

## விமல் வீரவன்ஸ ஆரூடம்



கொழும்பு, ஏப். 19

சர்வதேச நாணய நிதியமும், அமெரிக்கத் தூதரகமும்தான் இந்த நாட்டை ஆள்கின்றன. எனவே, ஈரான் ஜனாதிபதியின் இலங்கைக்கான பயணம் கடைசிநேரத்தில் இரத்துச் செய்யப்பட வாய்ப்புண்டு என்று நாடாளுமன்ற உறுப்பினரான விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார். ☞ 11

# கணவனின் மறைவால் மனைவி உயிர்மாய்ப்பு

யாழ்ப்பாணம், ஏப். 19

மாரடைப்புக் காரணமாக கணவன் உயிரிழந்ததையடுத்து, கணவனின் இறப்பைத் தாங்கமுடியாத மனைவியும் தவறான முடிவெடுத்து உயிரிழந்தார். இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

வவுனியா வடக்கு, நெடுங்கேணி, 6ஆம் கட்டைப் பகுதியைச் சேர்ந்த ராமச்சந்திரன் ரவீந்திரன் (வயது-49) மற்றும் ராமச்சந்திரன் ஜோதீஸ்வரி (வயது-49) ஆகியோரே இவ்வாறு உயிரிழந்தவர்களாவர். ☞ 11



# ரணில் ஒருவரே நாட்டின் மீட்பர்!

கொழும்பு, ஏப். 19

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் மட்டுமே இந்த நாட்டை மீட்க முடியும். அவரின் பயணப்பாதையை மாற்ற முற்பட்டால் நாட்டில் மீண்டும் வரிசை யுகம்தான் உருவாகும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே ☞ 11

# 131,652 குடும்பங்களுக்கு யாழில் இலவச அரிசி!

யாழ்ப்பாணம், ஏப். 19

யாழ்ப்பாணம் மாவட்டத்தில், ஒரு இலட்சத்து 31 ஆயிரத்து 652 குடும்பங்கள் இலவச அரிசிவழங்கும்திட்டத்துக்காகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போதே 10 கிலோ இலவச அரிசி வழங்கும் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டது.

பொதுமகன் ஒருவர், 10 கிலோ ☞ 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் [illegible] நிறைந்த தமிழ் நாளிதழ்

# அதிக விலையில் மாட்டிறைச்சி!

## நுகர்வோர் குற்றச்சாட்டு

மன்னார்,ஏப்.19
மன்னார் மாவட்ட நகரசபை மற்றும் பிரதேசசபைகளின் கீழ் இயங்கும் மாட்டிறைச்சி விற்பனை நிலையங்கள் பலவற்றில் அதிக விலைக்கு மாட்டிறைச்சி விற்கப்படுகின்றது என்று பொதுமக்கள் குற்றஞ் சுமத்தியுள்ளனர்.

அதேவேளை, உள்ளூராட்சிச்சபைகள் இயங்கிய காலப்பகுதியில் விற்பனை நிலையங்களில் மாட்டிறைச்சியின் விலை கிலோவுக்கு ஆயிரத்து 800 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. உள்ளூராட்சிச் சபைகள் கலைக்கப்பட்ட பின்னர் நிர்ணய விலை நீக்கப்பட்டுள்ளன என்று உள்ளூராட்சி மன்றங்கள் தெரிவித்திருந்தன.

இதுதொடர்பாக மன்னார் மாவட்ட செயலரிடம் கேட்கப்பட்டபோது, மாட்டிறைச்சியை வெவ்வேறு விலையில் விற்பனை செய்வது என்பது பொருத்தமற்றது. நிர்ணய விலை ஒன்றைத் தீர்மானிப்பது தொடர்பில் நுகர்வோர் அபிவிருத்தி அதிகாரசபை உள்ளடங்கலாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் இணைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார். (எ-56)



# பனையோலையின் கீழ் கல்முனைப் போராட்டம்

கொழும்பு, ஏப். 19
**கல்முனை வடக்குப் பிரதேச செயலகத்தின் நிர்வாகம் மீதான தொடர்ச்சியான அடக்குமுறைகளுக்கு எதிரான கவனவீர்ப்புப் போராட்டம் 24 ஆவது நாளாகவும் தொடர்கின்றது.**

சுட்டெரிக்கும் வெயிலின் கொடூரத்துக்கு நிழல் கூடாரம் அமைக்கத் தடை விதிக்கப்பட்ட நிலையில் பனை ஓலைகளைத் தாங்கி அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். தமது தீர்வுக்கான கோரிக்கைகளை முன்வைத்து கடந்த மார்ச் மாதம் 25 ஆம் திகதியிலிருந்து பிரதேச செயலகத்தின் முன்பாக அமைதிவழிப் போராட்டத்தில் மக்கள் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஏப்.19
எம்மவர் முற்றத்தின் ஏப்ரல் மாதக் கருத்தரங்கு, நல்லூரிலுள்ள எங்கட புத்தகங்கள் இல்லத்தில் நாளை சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. (எ-66)

# திக்கம்புரை - யாழ். பஸ் சேவை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப்.19
வலிகாமம் வடக்கு, வயாவிளான் திக்கம்புரை ரெயிலர்கடைச் சந்தியிலிருந்து யாழ்.நகருக்கான புதிய பஸ் சேவை கடந்த செவ்வாய்க்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களின் கோரிக்கைக்கு அமைய இந்த பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வடபிராந்தியப் போக்குவரத்துச்சபை பஸ் சேவைக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தது. (எ-66)

# 32.4 மில்லியன் நிதியில் 61 வேலைத் திட்டங்கள்

சாவகச்சேரி, ஏப்.19
தென்மராட்சி பிரதேச அபிவிருத்திக்கு இந்த வருட வரவு செலவுத் திட்டத்தில் 32.4 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலகத்தில் நடத்தப்பட்ட கூட்டங்களில் பொதுமக்கள் வழங்கிய முன்னுரிமை அடிப்படையிலான வேலைத் திட்டங்களை மேற்கொள்ள இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வருடாந்தம் ஒதுக்கப்படும் நிதியை ஒன்றிணைத்து இம்முறை பிரதேச மக்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளின் பிரகாரம் தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் 61 வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-9)



# வடமராட்சியில் மடுமாதா

யாழ்ப்பாணம், ஏப்.19
மடுமாதாவின் திருவுருவம் தாங்கிய ஊர்தி நேற்றுமுன்தினம் புதன்கிழமை வல்லை ஊடாக வடமராட்சிக்குப் பயணித்தது. மத வேறுபாடுகள் இன்றி மக்கள் பெருமளவில் மலர்தூவி வரவேற்பு அளித்தனர்.

மடுமாதா அன்னையின் ஊர்திக்கு நெல்லியடி எரிபொருள் நிலையத்துக்கு அருகில் இருந்து நெல்லியடிச் சந்திவரை தவில் நாதஸ்வர இசையுடன் வரவேற்பு வழங்கப்பட்டது. நெல்லியடி சந்தியிலிருந்து மேலைத்தேய வாத்திய இசையுடன் நகர்ந்த ஊர்தி பின்னர் நடனங்களும் இடம்பெற்று கரவெட்டி புனித அந்தோனியார் ஆலயத்துக்கு சென்று அங்கும் மடுமாதா அன்னையின் சொரூபம் வைக்கப்பட்டது.
(எ-100)

# சட்டவிரோத மீன்பிடி; கடற்படை கண்டறிவு

யாழ்ப்பாணம், ஏப்.19
வடமராட்சி கிழக்கு, கட்டைக்காடு கடற்பகுதியில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். வெற்றிலைக்கேணி கடற்படையினர் நேற்றுமுன்தினம் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பிலேயே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மின்ஒளி பாய்ச்சி அனுமதியற்ற வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டிருந்த குற்றச்சாட்டில் இவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரது படகும் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேகநபர் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக யாழ்ப்பாணம் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என்று வெற்றிலைக்கேணிக் கடற்படையினர் தெரிவித்தனர்.

அதேவேளை, கடந்த ஆண்டு மே மாதம் 28 ஆம் திகதி முதல், கடந்த 17 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் அடிப்படையில் 34 சுருக்குவலை தொழில் படகுகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று வெற்றிலைக்கேணிக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

அம்பன் முதல் சாலை வரையான 54 கிலோமீற்றர் தூரக் கடற்பரப்பில் இடம்பெறும் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளை ஓரளவுக்குக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடிந்துள்ளது என்றும் வெற்றிலைக்கேணிக் கடற்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ப-27,19)

# கசிப்புப் பொதியுடன் பெண் கைது

கசிப்பைப் பொதி செய்து கொண்டிருந்த பெண் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று சுன்னாகம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சுன்னாகம் தெற்கு, பூதராயர் கோயிலடியைச் சேர்ந்த 53 வயதுப் பெண் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ் குழு இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர். சந்தேகநபரிடம் இருந்து 10 ஆயிரம் மில்லிலீற்றர் கசிப்பும், பொதி செய்யப்பயன்படுத்திய உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-27)

# வவுனிக்குளத்தின் கீழ் 4,318 ஏக்கரில் சிறுபோகம்

முல்லைத்தீவு, ஏப்.19
வவுனிக்குள நீர்ப்பாசனத் திட்டத்தின்கீழ் 4 ஆயிரத்து 318 ஏக்கருக்கு மேல் சிறுபோக வேளாண்மைச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று வவுனிக்குள நீர்ப்பாசனப் பொறியியலாளர் கைலாயபிள்ளை பிரகாஸ் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, அரசாங்கத்தால் வழங்கப்படும் மானிய உரங்கள் உரிய காலத்தில் கிடைப்பதில்லை என்று அந்தப் பகுதி விவசாயிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

கடந்த பெரும்போக வேளாண்மையில் வெள்ளம் மற்றும் வெள்ளை ஈ தாக்கங்களால் பயிர்ச் செய்கையில் பெரும் அழிவுகள் ஏற்பட்டன. சிறுபோக காலப்பகுதிகளில் என்றாலும் மானிய உரங்களை உரிய காலப்பகுதிக்குள் தர நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-35)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோத்தாவின் வாகனம் பியூமியிடம் எப்படி?

**கொழும்பு, ஏப். 19**

**இலங்கையின் பிரபல நடிகை பியூமி ஹன்சமாலியின் சொத்துகள் தொடர்பில் விசாரணை ஆரம்பிக்கப்படவுள்ளது.**

அவரது சொத்துகள் மற்றும் குறிப்பாக அவர் பயன்படுத்தும் சொகுசு வாகனம் தொடர்பிலும் விசாரணை நடத்தக் கோரி சட்டவிரோத சொத்துகள் மற்றும் சொத்து விசாரணைப் பிரிவுக்கு கிடைத்த முறைப்பாட்டுக்கமையவே இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச முன்னர் பயன்படுத்திய 'ரேஞ்ச் ரோவர்' வாகனத்தை பியூமி பயன்படுத்தி வருகிறாரென முறைப்பாடு கிடைத்துள்ளது. அரசியல்வாதிகளின் கறுப்பு பணத்தை வெள்ளையாக்க மேற்கொள்ளப்படும் செயற்பாடாக இது சந்தேகிக்கப்படுகிறது என்றும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வாகனத்தின் சந்தைப் பெறுமதி சுமார் 100 மில்லியன் ரூபாவென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)

## நிறைவேற்றதிகாரம் தொடர வேண்டும்



டயானா கமகே தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 19

நாட்டின் தற்போதைய முறைமைக்கமைய நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை அவசியம் என்று இராஜாங்க அமைச்சர் டயானா கமகே தெரிவித்தார். அத்துடன், ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கே தனது ஆதரவு எனவும் கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

இந்நாட்டை மீட்கக்கூடிய ஒருவருக்கே ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவு வழங்கப்படும். அதனை ரணில் விக்கிரமசிங்க செய்துவருகின்றார். அவருக்கு மீண்டும் வாய்ப்பு வழங்கப்படவேண்டும். மக்கள் ஆணையுடன் அவர் பதவிக்கு வர வேண்டும். நாடாளுமன்ற வாக்கெடுப்பில் ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவு வழங்கியமை மகிழ்ச்சியளிக்கின்றது. அடுத்த பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி பக்கமே நிற்பேன். ஐக்கிய மக்கள் சக்தி அழைப்பு விடுத்தால்கூட ஏற்கப்போவதில்லை - என்றார். (ஒ - 44)



## பற்பசைக்குள் போதைப்பொருள்

கொழும்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேகநபருக்கு பற்பசையில் போதைப்பொருளை மறைத்து எடுத்து வந்த சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிறைச்சாலை அவசரகால பதில் தந்திரோபாயப் படை அதிகாரிகளால் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார். சந்தேகநபர் கொண்டு வந்த பற்பசைக் குழாயில் ஹெரோய்ன் போதைப்பொருளும் ஐஸ்போதைப்பொருளும் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

## மைத்திரிக்கு தடை நீடிப்பு

கொழும்பு, ஏப்.19

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராகப் பிறப்பிக்கப்பட்ட இடைக்காலத் தடையுத்தரவு எதிர்வரும் மே மாதம் 9 ஆம் திகதி வரை நீடிக்கும் என்று கொழும்பு மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று நீதிமன்றத்தில் எடுக்கப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவால் தாக்கல் செய்த மனுவில் மைத்திரிபால சிறிசேனவுக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவியில் நீடிப்பதற்கு எதிராக இடைக்காலத் தடை விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## ஹிருணிகாவுக்கு அழைப்பாணை

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திரவை எதிர்வரும் மே மாதம் 8ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ளது.

நீதிமன்றத் தீர்ப்பை அவமதித்த குற்றச்சாட்டு தொடர்பில் இந்த அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## ஒரு மேடையில் மோதிய சுதந்திரக் கட்சி அணிகள்

சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இரு அணிகளாக பிளவுபட்டிருக்கும் மைத்திரி தரப்பும், நிமால் சிறிபால டி சில்வா தரப்பும் நேற்று ஒரே நிகழ்வில் பங்கேற்று, சரமாரியாக விமர்சனக்கணைகளைத் தொடுத்தனர்.

உலகின் முதலாவது பெண் பிரதமரான சிறிமாவோ பண்டாரநாயக்க அம்மையாரின் 108 ஆவது பிறந்த நாள் நிகழ்வு கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மண்டப வளாகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மைத்திரி தரப்பும், நிமால் சிறிபாலடி சில்வா அணியும் பங்கேற்றிருந்தன. இவ்விரு அணிகளுக்கும் தனித்தனியாக ஆசனங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. மைத்திரி தரப்புடன் இணைந்து நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவும் பங்கேற்றிருந்தார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா மைத்திரிபால சிறிசேனவின் தலைமைத்துவத்தை கடுமையாக விமர்சித்தார்.

இதற்கு மைத்திரி தரப்பில் பதில் பொதுச்செயலாளரான துஷ்மந்த மித்ரபால பதிலடி கொடுத்தார். '77 இல் சிறிமாவோ அதிகாரத்தை இழந்தார். 94 வரை எதிரணியில் இருந்து அரசியல் செய்தார். அதனால்தான் கட்சியை பாதுகாக்கமுடிந்தது. சலுகைகளின் பின்னால் செல்லவில்லை. கட்சியைக் காட்டிக்கொடுக்கவும் இல்லை.' என்று குறிப்பிட்டார். (ஒ-44)

## புதினம் தெரியுமோ?

பட்சி சொன்னதாலையோ என்னவோ தமிழரசுக் கட்சியின்ர மத்திய குழுக் கூட்டத்தை அன்னைபூபதியின்ர நினைவுநாளில வைக்காமல் 23 ஆம் திகதிக்கு தள்ளி வைச்சிருக்கினமாம். ஒரு கூட்டத்துக்கு நாள் குறிக்கேக்க அந்த நாளில என்னென்ன சிக்கல்கள் இருக் கெண்டதை முதலே யோசிச்சு செய்தா ஏனிந்தச் சில்லெடுப்பு? இந்த மத்தியகுழுக் கூட்டத்தைக் கூட அவையள் ஒழுங்கா அறிவிக்கேலை. ஆரையெல்லாம் பதில் செயலாளருக்கு நினைவு வருகுதோ அவைக்கு போன் பண்ணி, 'மத்தியகுழுக் கூட்டம் வெள்ளிக்கிழமை நடக்கும்', 'வெள்ளிக்கிழமை நடக்க இருந்த கூட்டத்தை 23 ஆம் திகதிக்கு தள்ளி வைச்சிருக்கிறம்' எண்டு சொல்லிப் போட்டு, தன்ர கடமை முடிஞ்சுதெண்டு ஆள் தன்ர சோலியைப் பாக்கப் போடுவாராம். மத்திய குழுவில இருக்கிற கனபேருக்கு காத்துவாக்கிலதான் கூட்டம் இருக் கெண்டும் , ஒத்தி வைச்சிருக்கெண்டும் போய்ச் சேர்ந்திருக்காம். நீதிமன்றத்தில வழக்கு வந்தும் கூட இவையள் திருந்திற சிலமனைக் காணேலை.

இப்பிடி தங்கட இஷ்டப்படி கூட்டங்களைக் கூட்டுறதும், யாப்பே தெரியாமல் நடக்கிறதும், கூட்ட அறிக்கையளை எழுதாமல் இருக்கிறதும், பொதுக்குழுவில எத்தினை பேர் இருக்கினமெண்டு பொதுக்கூட்டம் நடக்கிற கடைசி நிமிசம் வரை ஆருக்கும் சொல்லாமல் ஒளிச்சு வைக்கிறதும் தான் கட்சியை இப்ப நடுத்தெருவுக்கு கொண்டந்து விட்டிருக்குது. மாவையர் தலைவரா இருக்கேக்க, கட்சிக் கூட்டங்களில ஏராளம் தீர்மானங்கள் எடுத்தவை. ஆனால் அதில கனதீர்மானங்களுக்கு என்ன நடந்தது எண்டு ஆருக்கும் தெரியாது. அப்பிடித் தீர்மானங்கள் எப்ப எடுக்கப்பட்டது எண்டும் ஒரு பதிவும் இல்லை. தமிழர்களின்ர பெரிய கட்சி எண்டு சொல்லிக் கொண்டு பாலர் வகுப்பு பிள்ளையளை விட மோசமா, ஒரு கூட்ட அறிக்கை கூட எழுதாமல் இருந்தவையெண்டா, கட்சி எப்பிடி உருப்படும்? பூதம் காத்த புதையல் மாதிரி, மார்ட்டின் றோட்டில எல்லாத்தையும் பூட்டி வைச்சு, பூச்சி அரிக்க விட்டதுதான் மிச்சம். கட்சிக்கான டொக்கிமெண்ட் ஒண்டு கூட உருப்படியா அவையிட்ட இல்லை.

உந்தத் தமிழரசுக் கட்சியின்ர பழைய நிர்வாகக்காரர் எல்லாரையும் ஏதும் ஒரு குக்கிராமத்து வாசிகசாலைக்கு அனுப்பி, அங்க கூட எவ்வளவு பக்குவமா, ஒழுங்கா ஆவணங்களை வைச்சிருக்கினம், அறிக்கையளை எழுதுகினம் கூட்டத்துக்கு எத்தினை நாளைக்கு முதல் அழைப்புக் குடுக்கினம். கூட்ட அழைப்புக் கடிதம் எப்பிடி எழுதிறது எண்டெல்லாம் பயிற்சி குடுக்கோணும். அப்ப தான் கொஞ்சமாவது இவை திருந்துவினம்.

கட்சியின்ர கூட்ட அறிக்கையையோ, யாப்புத் திருத்தத்தையோ ஒழுங்கா வைச்சிருக்க ஏலாத இந்தத் தமிழரசுக் கட்சிதான், காணாமற் போன ஆக்களின்ர விவரத்தையும், தமிழர்களின்ர தீர்வு காணுறமாதிரி ஒரு புது அரசமைப்பையும் உருவாக்கப்போகுதாம். முதல்ல கூரையில ஏறப் பழகுங்கோ, பிறகு வானம் ஏறி குண்டம் போறதைப் பற்றி யோசிக்கலாம்.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செவ்வாய் பயணத்தில் இலங்கைப் பெண்

கொழும்பு, ஏப். 19
செவ்வாயில் மனித ஆராய்ச்சியை மேற்கொள்வதற்கான குழுவில் அமெரிக்க விண்வெளி மையமான நாஸாவால் இலங்கையைச் சேர்ந்த பெண்ணொருவரும் இணைக்கப்பட்டுள்ளார்.
பியூமி விஜயசேகர என்பவரே ஆய்வில் பங்கேற்கவுள்ளார். இவர் கலிபோர்னியாவின் சிலிக்கன் பள்ளத்தாக்கில் உள்ள நாஸா அமெஸ் ஆராய்ச்சி மையத்திலுள்ள கதிர்வீச்சு உயிரியல் இயற்பியல் ஆய்வகத்தில் முதுகலை ஆராய்ச்சி விஞ்ஞானியா வார். இந்தக் குழுவினர், 45 நாள்கள் விண்வெளியில் பணிகளில் ஈடுபட்ட பின்னர், ஜூன் 24 திகதி பூமிக்கு திரும்பவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(ச-இ)

## ஈர விழிகளுடனும் வதங்கிய இதயத்திலிருந்து செலுத்தும் 16 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
27 . 06 . 2003

இறைவனின் அரவணைப்பில்
19 . 04 . 2008

**அமரர் இந்துஜா விஜயகுமார்**

அன்பின் உறைவிடமே! பாச மிகு மகளே இந்துஜா
எமை விட்டு நீ பிரிந்து பதினாறு வருடங்கள் சென்றாலும்
இன்னும் உன் நினைவுகளுடன்
நடைப் பிணங்களாக அலைந்து
கண்ணீர் சொரிந்து அஞ்சலிக்கின்றோம்.

அம்மா, அப்பா, தம்பி (இந்துஜன்)
மற்றும் குடும்பத்தினர்.
கொம்மந்தறை, வல்வெட்டித்துறை.

(CS54712) (N-1)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியை
திருமதி யூ.பத்மினி ஜஸ்டின் மேரி
அவர்களின் அன்புத் தந்தையார்
**அமரர் செல்லத்துரை அன்ரனீஸ்**
அவர்களின் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திப்பதோடு, அவரின் பிரிவால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரி கழகம், யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி

(CS 00255) S-1

## மரண அறிவித்தல்



தோற்றம்: 23.05.1944 மறைவு: 18.04.2024

### ஆசீர்வாதம் மதுரநாயகம்

**(முன்னாள் உதைபந்தாட்ட முதன்மை வீரர், முன்னாள் வாகன பெயின்ரர்)**

உரும்பிராய் கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆசீர்வாதம் மதுரநாயகம் நேற்று (18.04.2024) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆசீர்வாதம் - மரியம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பரமு - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இராசமலரின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற இராசநாயகம், பேபிவசந்தா, மரியதாஸ் மற்றும் லில்லிபுஷ்பம், திரவியநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், செல்வம் (சுவிஸ்), ஜெயந்தி (சுவிஸ்), காலஞ்சென்ற ஜெயராஜ் மற்றும் ஜெயக்குமாரி, நேசராஜ் (ஆசிரியர்), ஜெயசுதா (ஆசிரியர் யா/ உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்), ஜெயதரன் (லண்டன்), துஷ்யந்தி ஆகியோரின் அன்புத் தாந்தையும், வாசுகி (சுவிஸ்), துரைராஜா (சுவிஸ்), நிறஞ்சன்ராஜ், மதிவதனி (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்), சுரேஸ்குமார் (கால்நடை வைத்தியசாலை வேலணை), குமுதா (லண்டன்), ரஜீவ் (கணினி திருத்துனர்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அனோஜிகா, அக்ஷிகா (சுவிஸ்), அனுஜன், கெமில்ரன், கிசோர் (சுவிஸ்), நிருஷிகன், சாருஜன், டினோஜன், சக்ஷாந், கிஷானிகா, கிருத்திக்ஷா, டிலக்ஷிகா, ஜெனோசன், லவ்றின், கைலி, லூக், ரித்விகா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி அஞ்சலி நிகழ்வு இன்று (19.04.2024) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, மாலை 3.00 மணிக்கு உரும்பிராய் புனித மிக்கேல் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித மிக்கேல் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**உரும்பிராய் கிழக்கு,**
**உரும்பிராய்.**


தகவல்:
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

258) A-1

தொடர்புகளுக்கு:
**077 2288 231, 076 644 9409, 077 6490 009**

## மரண அறிவித்தல்

தோற்றம் 01 . 01 . 1953



மறைவு 18 . 04 . 2024

### இராசையா சிவதாசன்

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா சிவதாசன் அவர்கள் நேற்று (18.04.2024) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா - இராசமணி தம்பதியரின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்ற சரவணமுத்து - யோகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சாந்தநாயகி அவர்களின் அன்புக் கணவரும், சபேசன், விஜிதா, சுஜிதா ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சண்முகப்பிரியன், துஷியந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும், சங்கவி, அருணப்பிரசாத், அக்ஷவி ஆகியோரின் அன்புப் பேரனும், சங்கரசிவம், மங்கையற்கரசி, மனோன்மணி (அழகு) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.04.2024) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**பிரம்படி வீதி,**
**கொக்குவில் கிழக்கு,**
**077 667 6978 (மகன்)**

தகவல்:
**குடும்பத்தினர்.**

(CS 00259) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


## பொதுவேட்பாளரால் வந்த பிளவு

இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் என்று அரசாங்கம் அறிவித்திருக்கின்றது. தெற்கில் அரசியல் கட்சிகள் ஜனாதிபதித் தேர்தலுக்கான பரப்புரைகளை ஆரம்பித்திருக்கும் நிலையில், தமிழர்கள் மத்தியில் பொதுவேட்பாளரைக் களமிறக்குவது பற்றிய கருத்தாடல்கள் ஆரம்பித்துள்ளன.கடந்த காலங்களில் தமிழ் மக்களுக்கு பெரும்பான்மையினத் தலைவர்களால் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் வாய்ச்சொல்லுடன் கரைந்துவிட்ட நிலையில் - தமிழ் மக்கள் தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்ட பின்னணியில் - ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் சார்பாகப் பொதுவேட்பாளர் ஒருவரைக் களமிறக்கவேண்டும் என்ற கருத்து வலுவாக எழுந்திருக்கின்றது. சிங்களத் தலைவர்களின் வாக்குறுதிகளை இனியும் நம்பத் தயாரில்லை என்ற தமிழ் மக்களின் மனக்கிடக்கையை உறைக்கக்கூறும் வாய்ப்பாக இந்தப் பொதுவேட்பாளர் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

தமிழ் மக்கள் சார்பில் பொதுவேட்பாளர் ஒருவரைக் களமிறக்குவதும் - தமிழ் மக்கள் அனைவரையும் ஒரு நிரல்படுத்துவதும் இலகுவானதாக இருக்கப் போவதில்லை. கட்சி மோதல்கள் - உட்கட்சி மோதல்கள் என்று சிதறுண்டு கிடக்கும் தமிழ் அரசியல் தளத்தில் இந்த முயற்சி பெரும் பிரயத்தனம் மிக்கதாகவே இருக்கும். இந்த முயற்சி செயலுருப் பெற வேண்டுமானால் - வெற்றியளிக்க வேண்டுமானால் தமிழ் அரசியல் தளத்தில் ஏற்பட வண்டிய மாற்றங்களே மிக முக்கியமானவை.

'தமிழ்ப் பொதுவேட்பாளர்' என்ற கருத்து வெளியானது முதலே தமிழ் அரசியல் கட்சிகளிடையே கருத்து மோதல்கள் ஆரம்பித்திருக்கின்றன. பொதுவெளியில் ஒருவரை ஒருவர் விமர்சிக்க ஆரம்பித்திருக்கின்றனர். பொது வேட்பாளர் என்ற கருத்தோட்டத்துக்கு ஆதரவாகவும், எதிராகவும் ஊடகங்களில் கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன - சேறுபூசல்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. தமிழ் அரசியல் தளத்தில் இவ்வாறான அரசியல் பண்பே கடந்த காலங்களிலும் வெளிப்பட்டிருந்தது. ஒருவரை ஒருவர் குற்றஞ்சாட்டி பொறுப்புகளில் இருந்து தப்பிக்கொள்ளும் - அரசியல் ஆதாயம் தேட முயலும் தமிழ்க் கட்சிகளின் அரசியல் பண்பே, தமிழ் மக்களை அவர்களிடம் இருந்து தூரக் கொண்டு சென்றிருக்கின்றது. தற்போதும் தமிழ் அரசியல் கட்சிகள் அந்தப் போக்கைக் கைக் கொள்வது மக்களை இன்னமும் அவர்களிடத்தில் இருந்துதூரமாக்குமே தவிர, நேர்மறை விளைவுகள் எதையும் ஏற்படுத்தப்போவதில்லை.

அரசியல் ஆதாயங்களுக்கு அப்பால், தமிழ் மக்களின் எதிர்கால நலன்கருதி 'தமிழ்ப் பொது வேட்பாளர்' என்னும்திட்டத்தைச்செயற்படுத்த விரும்பின் தமிழ்க் கட்சிகள் முதலில் தங்களிடையே ஓர் இணக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள முயலவேண்டும். அவர்கள் ஒருமித்த புள்ளிக்கு வந்த பின்னர் மக்களைச் சந்திக்க வேண்டும். அதைவிடுத்து ஒலிவாங்கிகளின் முன்பாகவும், அறிக்கைகள் ஊடாகவும் ஒருவர் மீது ஒருவர் சாடி -சேறு பூசிக்கொள்வதால் எதுவும் நடந்துவிடப் போவதில்லை. மக்களும் அவர்களின் பின்னால் திரளப்போவதில்லை. இந்த நிதர்சனத்தை தமிழ் அரசியல் கட்சிகள் உணர்ந்து செயற்படவேண்டும் என்பதே தமிழ் மக்களின் அவா.




# நாட்டின் பணவீக்கம்; பெப்ரவரியில் குறைவு

கொழும்பு, ஏப்.19

**இந்த ஆண்டு பெப்ரவரியில், தேசிய நுகர்வோர் விலைக் குறியீட்டின்படி, நாட்டின் பணவீக்கம் கடந்த மாதத்துடன் ஒப்பிடுகையில் குறைந்துள்ளதாக மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.**

நாட்டில் தனிநபரின் மாதாந்த செலவு ஜனவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் பெப்ரவரி மாதத்தில் குறைவாகக் காணப்பட்டுள்ளது. நாட்டிலுள்ள ஒருவருக்கு அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய மாதாந்தம் குறைந்த பட்சம் 16ஆயிரத்து 975 ரூபா தேவைப் படுகிறது என்றும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

## கட்டுநாயக்க - டுபாய் விமானசேவை இரத்து



தற்போது நிலவும் மோசமான காலநிலை காரணமாக டுபாய்க்கான விமானசேவைகள் இரத்துச்செய்யப் பட்டுள்ளன என்று சிறிலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது. ஐக்கிய அரபு அமீரகத்தில் கனமழை பெய்து வருவதையடுத்து சர்வதேச விமான நிலையத்தில் வெள்ளநீர் புகுந்து பாதிப்பு ஏற்பட்டுள்ளது. விமானநிலையத்துக்கு வந்த பல விமானங்கள் வேறு பகுதிகளுக்குத் திருப்பி விடப்பட்டன. இந்த நிலையில் கட்டுநாயக்க விமானநிலையத்திலிருந்து டுபாய்க்குப் புறப்படவிருந்த விமானசேவைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன என்று சிறிலங்கன் எயார்லைன்ஸ் அறிவித்துள்ளது. (ச-இ)

## 21 இலங்கையர் ஈரானால் மீட்பு

கொழும்பு, ஏப். 19

ஓமான் வளைகுடாவில் மூழ்கிய கப்பல் ஒன்றிலிருந்து 21 இலங்கை பணியாளர்களை ஈரானிய அதிகாரிகள் மீட்டுள்ளனர் என ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது. ஈரானின் ஜாஸ்க் கடற்கரையிலிருந்து 30 மைல் தொலைவில் புயல் காரணமாக கப்பல் சேதமடைந்து மூழ்க முற்பட்ட போதே அவர்கள் காப்பாற்றப்பட்டுள்ளனர். (ச-இ)

## தோட்டத் தொழிலாளர்களுக்கு விரைவில் ஈ.பி.எவ்., ஈ.ரி.எவ்.!

அரச பெருந்தோட்ட நிறுவனங்களின் கீழ் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி ஆகியவற்றை விரைவில் வழங்குவது தொடர்பில் அமைச்சரவைப் பத்திரம் அடுத்த வாரம் அமைச்சரவைக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளது. அரச பெருந்தோட்ட நிறுவன மறுசீரமைப்பு அமைச்சரும் நிதி இராஜாங்க அமைச்சருமான கலாநிதி ரஞ்சித் சியம்பலாபிட்டிய இதனைத் தெரிவித்தார். உழைக்கும் மக்களின் சட்ட உரிமைகளைப் பாதுகாத்து பெருந்தோட்ட நிறுவன சீர்திருத்தங்களை ஆரம்பிக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் உறுதியுரை மல்கம் ரஞ்சித்திடம்

கொழும்பு, ஏப்.19

2019ஆம் ஆண்டு நடந்த உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் கொல்லப்பட்ட மக்களுக்கும், பாதிக்கப்பட்டவர்களுக்கும் நீதியை பெற்றுக்கொடுப்பதற்கான தேசிய மக்கள் சக்தியின் உறுதியுரை கொழும்புப் பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையிடம் நேற்று கையளிக்கப்பட்டுள்ளது.

பொரளையில் உள்ள பேராயரின் இல்லத்தில் வைத்து தேசிய மக்கள் சக்தியின் தலைவர்களால் குறித்த உறுதியுரை வழங்கிவைக்கப்பட்டது. (எ-44)

### நாளை

20.04.2024

சனிக்கிழமை

சித்திரை - 07

சுபநேரம் : 03.02 - 04.32

ராகுகாலம் : 09.02 - 10.32


### நாளொரு நல்வார்த்தை

எல்லோரையும் திருப்திப்பட
வைக்க நினைப்பவனால்
வாழ்க்கையில் வெற்றி
பெற முடியாது

– லெனின் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரோதி : புதுவருடப் பலன்கள்






எல்லோரும் எல்லாம் பெற வேண்டும் என்ற எண்ணம் கொண்ட நீங்கள், நீதி கிடைக்கும் வரை ஓயமாட்டீர்கள். சூரியன், புதன் மற்றும் சுக்ரன் ஆகிய கிரகங்கள் சாதகமாக இருக்கும் நேரத்தில் இந்த குரோதி வருடம் பிறப்பதால் உங்களுடைய ஆளுமைத் திறன், நிர்வாகத் திறமை அதிகரிக்கும். கடினமான காரியங்களையும் எளிதாக முடித்துக் காட்டுவீர்கள். பணப்புழக்கம் அதிகமாகும். கௌரவப் பதவி, புதுப் பொறுப்புகள் தேடி வரும்.

உங்கள் ராசியிலேயே இந்தக் குரோதி வருடம் பிறப்பதால் ஆரோக்கியத்தில் மட்டும் கூடுதல் கவனம் செலுத்துங்கள். அவ்வப்போது வீண் பதற்றம் மன அமைதியின்மை, முன்கோபம் வந்து நீங்கும்.

குருபகவான் 30.4.2024 வரை உங்கள் ராசிக்கு இலாப வீட்டில் அமர்ந்திருப்பதால் உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். அடுத்தடுத்த சுபநிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும்.

01.05.2024 முதல் வருடம் முடியும் வரை குரு உங்கள் ராசிக்கு 12இல் மறைவதால் வீண் விரயம், ஏமாற்றம், தூக்கமின்மை, செலவுகள் வந்து செல்லும். இந்தாண்டு முழுக்க ராகுபகவான் உங்கள் ராசிக்கு பத்தாவது வீட்டில் அமர்ந்திருப்பதால் கடினமான காரியங்களையும் சர்வ சாதாரணமாக செய்து முடிப்பீர்கள். உங்கள் வார்த்தைக்கு மதிப்புக்கூடும். இரட்டிப்பு இலாபம் உண்டாகும்.

இந்த தமிழ்ப் புத்தாண்டு உங்களைக் கடினமாக உழைக்க வைத்து, தன்னம்பிக்கையால் தலை நிமிரச் செய்யும்.

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரிப்பதற்கு புதிய குழு!

கொழும்பு, ஏப்.19

பதவிக்கு வந்தால் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பாகப் புதிய குழு ஒன்றை நியமித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் என்று தேசிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் ஐந்து வருட பூர்த்தியை முன்னிட்டு 7 அம்ச அறிக்கையொன்றை தேசிய மக்கள் சக்தி வெளியிட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுடன் நேரடியாகவோ மறைமுகமாகவோ சம்பந்தப்பட்டவர்களை தண்டிப்போம் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக குற்றவியல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுப்போம் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-6)

## திருட்டில் ஈடுபட்ட சிறுவர்கள் கைது

கொழும்பு, ஏப். 19

முகமூடி அணிந்து வீடுகளுக்குள் அத்துமீறி நுழைந்த மர்மக் கும்பலைச் சேர்ந்த மூன்று சிறுவர்களை கஹதுடுவ குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர்கள் 13 மற்றும் 18 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என்றும் அவர்களில் பாடசாலை செல்லும் சிறுவர்களும் அடங்குகின்றனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

வீடுகளில் இருந்த மடிக்கணினிகள், பித்தளைப் பொருள்கள், கைத்தொலைபேசிகள் உள்ளிட்ட சொத்துகள் திருடப்பட்டு சிறுவர்கள் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளமை விசாரணையில் தெரியவந்துள்ளது. (ச-இ)

## அருட்தந்தை சிறிலுக்கு சி.ஐ.டி.யினர் அழைப்பு

கொழும்பு, ஏப். 19

அருட்தந்தை சிறில் காமினி பெர்னாண்டோ மீண்டும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பான உண்மைகளை விசாரிப்பதற்காக அவர் அழைக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இன்று வெள்ளிக்கிழமை குற்றப் புலனாய்வுப் பிரிவில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## சுற்றுச்சூழல் அழிப்பு முறையிட இலக்கம்

கொழும்பு, ஏப். 19

சுற்றுச்சூழல் குற்றங்கள் தொடர்பில் முறையிட 1997 மற்றும் 1981 என்ற தொலைபேசி எண்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதன்படி ஆற்றங்கரை அரிப்பு, தொழிற்சாலைக் கழிவுகளை அகற்றுதல், துளையிடுதல் உள்ளிட்ட சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் விடயங்கள் தொடர்பில் இந்தத் தொலைபேசி எண்களுக்கு அறிவிக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம் ஏப்.19

வடஇலங்கை சமாதான நீதிவான் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம், கோண்டாவில் இராஜேஸ்வரி மண்டபத்தில் தலைவர் கா.பீ. ஜெயவிந்தன் தலைமையில், நாளை 20 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

கூட்டத்தில் அனைத்துச் சமாதான நீதிவான்களையும் கலந்துகொள்ளுமாறு சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார்.

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகள் இழுபறியாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். வீண் செலவுகள் ஏற்படும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்க வாய்ப்புண்டு. விநாயகர் வழிபட காரியங்கள் அனுகூலமாகும்.

**இடபம்:** மனதில் சிறு சிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். பொறுமை அவசியம். சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். நினைத்த காரியங்கள் வெற்றிகரமாக நிறைவேறும். உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும்.

**மிதுனம்:** உற்சாகமாகவும் பரபரப்பாகவும் செயற்படுவீர்கள். நினைத்த காரியத்தை செய்து முடிப்பீர்கள். மனவருத்தங்கள் நீங்கும். செலவுகளை சமாளிப்பதில் சிரமம் எதுவும் இருக்காது. மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்க வாய்ப்பு உண்டு.

**கடகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். எதிர்பார்த்த உதவி கிடைப்பது தாமதமாகும். மனதில் குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். வியாபாரத்தில் பணியாளர்களால் பிரச்சினைகள் ஏற்படக்கூடும். வழிபாடு நலம் சேர்க்கும்.

**சிம்மம்:** அவசர முடிவுகளைத் தவிர்க்கவும். காரியங்களில் பொறுமை மிக அவசியம். அதிகரிக்கும் செலவுகளால் கையிருப்பு கரையும். தந்தையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் கிடைக்கும்.

**கன்னி:** செலவுகள் அதிகரிக்கும் நாள். என்றாலும் தேவையான பணம் இருப்பதால் சமாளிப்பதில் சிரமம் இருக்காது. மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்க வாய்ப்பு உள்ளது. உறவினர்களால் ஆதாயம் கிடைக்கும்.

**துலாம்:** ஆதாயம் கிடைக்கும். காரியம் அனுகூலமாக முடியும். சுபநிகழ்ச்சிக்கான பேச்சு சாதகமாகும். தொடங்கும் புதிய முயற்சி வெற்றிகரமாக நிறைவேறும். மனஇறுக்கம் நீங்கி நிம்மதி உண்டாகும்.

**விருச்சிகம்:** பதற்றம் இல்லாமல் செயற்படவேண்டிய நாள். வீண் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்புள்ளது. பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**தனுசு:** புதிய முயற்சிகளைக் கண்டிப்பாகத் தவிர்க்கவும். அவ்வப்போது சோர்வு உண்டாகும். உறவினர்களின் வருகையால் தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும். அம்பிகை வழிபாடு அல்லல் தீர்க்கும்.

**மகரம்:** மனதில் அவ்வப்போது சில குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். பிள்ளைகள் மூலம் குடும்பத்தில் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. பொறுமை அவசியம். காரியம் இழுபறியாகும். பணஉதவி கிடைக்க வாய்ப்பு உள்ளது.

**கும்பம்:** பிறருக்குக் கொடுத்த கடன் திரும்பக் கிடைக்க வாய்ப்பு உள்ளது. எதிர்பார்த்த காரியம் இழுபறியானாலும் முடிந்துவிடும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும். நண்பர்களிடம் எதிர்பார்த்த காரியம் சாதகமாகும்.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். ஆதாயம் உண்டாகும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். முயற்சிகள் சாதகமாகும். எதிர்பார்த்த சலுகை கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஏப். 19

இணுவில் மஞ்சத்தடி அருணகிரிநாதர் சிவசுப்பிரமணியர் சுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழா நாளை சனிக்கிழமை மு.ப. 10.45 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பன்னிரண்டு தினங்கள் காலை, மாலை உற்சவங்களாக மஹோற்சவப் பெருவிழா இடம்பெறும். எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு 7.30 மணிக்கு சப்பரத் திருவிழாவும், 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு தேர்த் திருவிழாவும், அடுத்தமாதம் 1 ஆம் திகதி புதன் கிழமை மு.ப. 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறுமென ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (66)


## வேலை ஆட்கள் தேவை

Belarus Job Visa
Restorant க்கு வெளிநாடு
செல்ல விரும்பும்
வேலை ஆட்கள் தேவை.

தொடர்பு:- 071 621 3903

(CS/54753) J-1



## பெயர் மாற்றம்

அச்சுவேலி தோப்பு அச்சுவேலி இல் வசிக்கும் **கௌசிகன்** ஆகிய நான் எனது பெயரை **சூரிய ஆரச்சிலகே ஒசத கௌசிக சூரிய ஆரச்சி** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **சூரிய ஆரச்சிலகே ஒசத கௌசிக சூரிய ஆரச்சி** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

**சூரிய ஆரச்சிலகே ஒசத கௌசிக சூரிய ஆரச்சி**

(cs 54767) (N-1)



## மின்சாரத்தில் இயங்கும் மரச்செக்கு - 2 விற்பனைக்கு

- 10Kg (W) 3HP Motor,
- 15Kg (w) 5HP Motor,

பொருத்தப்பட்டு இயங்கிய நிலையிலுள்ள எண்ணெய் வடிக்கும் இரண்டு மரச்செக்குகள் விற்பனைக்கு உண்டு.




இடம்:- வட்டுக்கோட்டை

தொடர்பு:- 077 029 3576, 077 444 8732

(CS/54750) J-1


## பொது அறிவித்தல்
## வேலணை பிரதேச சபை

வேலணை பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான யாழ்ப்பாணம் - ஊர்காவற்றுறை பிரதான வீதி மற்றும் வழுக்கையாறு - குறிகாட்டுவான் இடது பக்க வளைவிலுள்ள பிரதேச செயலகத்தினால் ஒதுக்கப்பட்ட காணித்துண்டில் 50 அடி தூரத்தில் வித்துவான் க.வேந்தனார் அவர்களின் உருவச்சிலை நிறுவுவதற்கு தலைவர், வேலணை ஒன்றியம், வங்களாவடி அமைப்பினால் கட்டட அனுமதிக்கு முன்னளிக்கப்பட்டுள்ளது.





குறித்த உருவச்சிலை நிறுவுவதற்கு ஆட்சேபனை ஏதும் இருப்பின் எதிர்வரும் **06.05.2024** ஆம் திகதிக்கு முன் எழுத்து மூலம் செயலாளர், வேலணை பிரதேச சபை, வேலணை எனும் முகவரிக்கு அறியத் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**செயலாளர்,**
**வேலணை பிரதேச சபை, வேலணை.**

(cs240) (N-1)

## அஞ்சலி நிகழ்வு

### V.குமரகுருபரன் (கணித ஆசிரியர்)



நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் இத்தாலி நாப்போலியை வதிவிடமாகவும் கொண்ட V.குமரகுருபரன் (கணித ஆசிரியர்) அவர்கள் 14.04.2024 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் அஞ்சலி நிகழ்வு பிரதான வீதி **"கலைத்தூது கலையகத்தில்"** (பெற்றோல் நிரப்பு நிலையம் முன்பாக) நாளை (20.04.2024) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற ஏற்பாடாகி உள்ளது. இவ் அஞ்சலி நிகழ்வில் உறவுகள், ஆசிரியர்கள், மாணவர்கள், நண்பர்கள், பெரியோர்கள் அனைவரையும் கலந்து அஞ்சலி செலுத்துமாறு வேண்டி நிற்கின்றோம்.

ஊரோடு உறவாட குழுமம்,
நாரந்தனை உறவுகள்.

(CS/54772) J-1

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 05 . 05 . 1930



மறைவு 22 . 03 . 2024

கடந்த 22.03.2024 அன்று இறைபதமடைந்த

அமரர் **கந்தையா வாலாம்பிகை**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (19.04.2024) வெள்ளிக் கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளைமறுதினம் (21.04.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெற இருப்பதால் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


8/4, புகையிரத வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

(cs 54771) (N-1)

குடும்பத்தினர்.
077 851 4016

## ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு 06 . 11 . 1954



இறப்பு 15 . 04 . 2019

### பொன்னையா சிவராசசிங்கம்
(ஓய்வுபெற்ற இ.போ.சாரதி)

ஆண்டுகள் ஐந்து
கடந்து சென்றும்
எங்கள் மனதில்
மங்காத நினைவுகளில்
என்றும் நிலைத்திருப்பார்
அமைதியாக உறங்கும்
நின் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

கேணியடி வீதி,
மீசாலை மேற்கு, மீசாலை.

என்றும் உங்கள் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்

(CS/54766) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரப் பலஸ்தீனம் இன்று வாக்கெடுப்பு!

பலஸ்தீனத்தை ஐ.நா. உறுப்பு நாடாக அங்கீகரித்து ஏற்றுக்கொள்வது தொடர்பான வாக்கெடுப்பு இன்று இடம்பெறவுள்ளது.

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் அமைப்புக்கு எதிரானமோதலையடுத்து, பிராந்தியத்தில் அமைதியை ஏற்படுத்த சுதந்திரப் பலஸ்தீனமே சிறந்த வழி என்று அமெரிக்கா, கனடா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் ஏற்கனவே வலியுறுத்தியுள்ளன. இலங்கை, இந்தியா, சீனா போன்ற ஆசிய நாடுகளும் இந்த முடிவுக்குத் தமது இணக்கத்தையும் வரவேற்பையும் தெரிவித்திருந்தன.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே, பலஸ்தீனத்தை ஐ.நா. உறுப்புநாடாக அங்கீகரித்து ஏற்றுக் கொள்வது தொடர்பான வாக்கெடுப்பு இன்று இடம்பெறவுள்ளது.

'இஸ்ரேல், பலஸ்தீனம்' என்ற இருநாட்டுக் கொள்கையை அமெரிக்கா திரும்பத்திரும்ப வலியுறுத்தி வந்தாலும், இஸ்ரேலின் ஆதரவில்லாமல் இதைத் தீர்வாக திணிக்கமுடியாது என்றும் அவ்வாறான செயற்பாடுகளை அமெரிக்கா எதிர்க்கும் எனவும் அமெரிக்கா வெளிப்படையாக அறிவித்துள்ள பின்னணியில், இந்தத் தீர்மானத்துக்கு எதிராக வீட்டோ அதிகாரத்தை அமெரிக்கா பயன்படுத்த வாய்ப்புள்ளதாகவே கருதப்படுகின்றது.

பலஸ்தீனம் உருவாக்கப்பட்டால், அந்த நாட்டுக்கென தனியான இராணுவம் உருவாகும். பின்னர் பலஸ்தீன இராணுவத்துடன் அரபு நாடுகள் கூட்டணிகளை அமைத்தால் அது பிராந்தியத் தில் இஸ்ரேலின் இருப்பை இல்லாமற்செய்யும் என்பதே சுதந்திர பலஸ் தீனத்தை இஸ்ரேல் எதிர்ப்பதன் பிரதான காரணம் என்பது குறிப்பிடத்தக்கது.

(ம-6)


## வவுனியா இராசேந்திரகுளம் கால்நடை வளர்ப்பாளர் கூட்டுறவுச் சங்கம்
## விசேட பொதுக்கூட்ட அறிவித்தல் - புதிய இயக்குநர் சபை தெரிவு

மேற்படி சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் 20.04.2024 அன்று முற்பகல் 09.30 மணியளவில் தம்பனைப்புளியங்குளம் பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் அனைத்து அங்கத்தவர்களும் தவறாது கலந்து கொண்டு புதிய இயக்குநர் சபை தெரிவிற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**செயலாளர்,**
**வவுனியா இராசேந்திரகுளம்**
**கால்நடை வளர்ப்பாளர் கூட்டுறவுச் சங்கம்.** (CR 42231) S-1

## வேலைவாய்ப்பு

யாழ் நகரில் அமைந்துள்ள ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் (புத்தகசாலை), மற்றும் சமுத்திரா ரேடர்ஸ் **(Hardware)** ஆகிய நிறுவனங்களுக்கான வேலைவாய்ப்பு ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

**077 494 9683, 077 077 6469**

## பணியாளர் தேவை

மானிப்பாயில் அமைந்துள்ள நிறுவனம் ஒன்றுக்கு
**பில் கிளார்க்,**
**தச்சு வேலையாள்** தேவை.
முன் அனுபவம் விரும்பத்தக்கது.
வயதெல்லை : 40 வயதுக்கு மேற்பட்டவர்கள்


தொடர்பு: **076 276 8233**

## சிகை அலங்கரிப்பு நிலையம் குத்தகைக்கு

நவாலி றோட் ஆனைக்கோட்டை வீதியில் அமைந்துள்ள சிகை அலங்கரிப்பு நிலையம். தளபாடப் பொருட்களுடன் குத்தகைக்கு கொடுக்கப்படும்.

தொடர்பு: **077 4573 580**

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில் 10 . 01 . 1943
விண்ணில் 19 . 04 . 2023

### அமரர் பொன்னுத்துரை கனகாம்பிகை

*திதி: அபரபக்க சதுர்த்தசி*

அன்னமிட்டு அனைவரையும் ஆதரித்த கரங்கள் - இன்று
அனாதையாய் எம்மை அழவிட்டு சென்றதேனோ?

ஆண்டு ஒன்று ஆயினும் இன்று வரை
ஆறாக் காயத்தையே எம் நெஞ்சும் சுமக்குதம்மா

பாசத்திற்கு இலக்கணமாய் இருந்த நீரும்
படைத்தவன் பாதத்திற்கே மீண்டும் போனதேனோ
உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி!!!**

**மட்டுவில் தெற்கு,**
**வாகையடி வீதி, சாவகச்சேரி.** (cr42230) (2.6)
**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்



பிறப்பு 04 . 01 . 1958
இறப்பு 15 . 04 . 2024

### வீரகத்தி குமரகுருபரன்

**(குமரன். பரம், முன்னாள் நூலகர் பிரதேசசபை ஊர்காவற்றுறை, முன்னாள் பிரபல கணித பாட ஆசிரியர் யாழ், கொழும்பு)**

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, இத்தாலியை வசிப்பிடமாகவும் கொண்ட வீரகத்தி குமரகுருபரன் 15.04.2024 அன்று இத்தாலியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரகத்தி - முத்துப்பிள்ளை தம்பதியினரின் மகனும், காலஞ்சென்றவர்களான அந்தோனி - பவுலீனம்மா தம்பதியினரின் மருமகனும், ஜெம்மாவின் அன்புக் கணவரும், ஜீவிதன், ஜீவநாத் ஆகியோரின் தந்தையும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, நாகமுத்து, சண்முகலிங்கம், இராஜேஸ்வரி ம்ற்றும் அருளானந்தசிவம் (இத்தாலி) ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற சரவணபவன் மற்றும் சிவபாக்கியம், ஈஸ்வரி காலஞ்சென்ற சண்முகரத்தினம் மற்றும் மேரி, காலஞ்சென்றவர்களான ஜெற்றூட், ஜேம்ஸ், சேவியர் மற்றும் சிசிலியா, றீற்றா, மொறின் ஆகியோரின் மைத்துனரும், யாழினி, கமலினி, வாசுகி, செறோன், சஞ்சீவன் ஆகியோரின் சிறிய தந்தையும், மலர்விழி, மங்கை, றஞ்சித், விஜித், ஜெயறஞ்சினி சுஜித் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (21.04.2024) ஞாயிற்றுக்கிழமை இத்தாலி நாப்போலியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**சண்டிலிப்பாய் மத்தி,**
**சண்டிலிப்பாய், யாழ்ப்பாணம்.** (CS/250) J-1
**பெறாமக்கள்**
**077 860 2017**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 10 . 05 . 1959
விண்ணில் 01 . 05 . 2023

### சரவணமுத்து இரவீந்திரன் (ரவி)

**ஆண்டொன்று மறைந்து விட்டது அப்பா!**
**அகலுமா உங்கள் பிரிவின் சோகம்**
**மறையுமா உங்கள் நினைவின் பாசம்**
**எங்களை நிர்க்கதியாய் அநாதையாய்ப் பரிதவிக்க**
**விட்டு விட்டு எங்கு சென்றீர்கள்**
**காலங்கள் ஆயிரம் போனாலும்**
**மறக்க முடியுமா உங்கள் நினைவுகளை**
**எங்கள் உயிர் உள்ள வரை எங்கள்**
**நினைவுகள் தொடரும்**
**ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.**

**கல்வியங்காடு**
**குடும்பத்தினர்.** (CS 253) V-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு

# வாழ்வில் வெற்றி பெறுங்கள்

நானே ஆரம்பம்
வெல்வோம் ஸ்ரீலங்கா
SMART சூரன்களோடு



"வாழ்வில் வெற்றி பெற உங்களுக்கு ஒரு இலட்சியம் தேவை. அந்த இலட்சியத்தை அடைய முயற்சியும் அர்ப்பணிப்பும் தேவை. வேலைக்குச் சென்று முன்னேறுவதை இலட்சியமாகக் கொண்ட எமது முயற்சி வெற்றியடைந்து கொண்டிருக்கின்றது. எனவே எம்மைப் போன்ற இளைஞர்களின் வெளிநாட்டு வேலைவாய்ப்பு என்ற கனவை இலகுவில் நனவாக்கிக் கொள்ளலாம்."

வெளிநாட்டு வேலைகளால் சம்பாதிக்கும் பணத்தை வங்கிகள் ஊடாக மட்டும் அனுப்புங்கள்...
மேலதிக பல நன்மைகளைப் பெற்றிடுங்கள்.

**மேலதிக விபரங்களுக்கு அழைக்கவும் 1989**

www.slbfe.lk

## நாடு முழுவதும் விஸ்தரிக்கப்பட்டிருக்கும் மக்கள் நடமாடும் சேவை மன்னாரில்

**ஏப்ரல் 20-21** மு.ப. 09.30 மணியிலிருந்து பி.ப. 4.00 மணி வரை

## மன்னார் நகரசபை மைதானத்தில்

வெளிநாட்டு வேலை தேடும் உங்களுக்கும்...

* அனுமதிப்பத்திரம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்களால் வெளிநாட்டு வேலைவாய்ப்புகள்
* பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்கள் மற்றும் புலமைப்பரிசில்கள்
* பாடசாலைகளுக்கு 'Smart Board'
* சுயவேலைவாய்ப்புக்கான உதவிகள் மற்றும் ஆலோசனைகள் உள்ளிட்ட பல சேவைகள்

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்து வெளிநாட்டு வேலைகளுக்கு செல்லும் உங்களுக்கு பூரண பாதுகாப்புண்டு. மேலதிக விபரங்களை பெற்றுக் கொள்ள வெல்வோம் ஸ்ரீலங்கா நடமாடும் சேவையின் பணியக காட்சியகத்துக்கு வருகை தரவும்.

**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்**
அக்கரையில் மாண்பு இக்கரையில் கைகோர்ப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவில் அதிகரித்துள்ள சட்டவிரோத மீன்பிடித் தொழில்

## கடற்படையினர் பாராமுகம் எனக் குற்றச்சாட்டு

**முல்லைத்தீவு, ஏப்.19**

**முல்லைத்தீவு மாவட்டத்தில் சாலை தொடக்கம் கொக்குளாய் வரையான கடற்பரப்பில் சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளதாகவும் அதனைக் கடற்படையினர் கட்டுப்படுத்தத் தவறிவருகின்றனர் என்றும் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர்கள் கடற்றொழில் அமைச்சரிடம் தெரிவித்துள்ளார்கள்.**

முல்லைத்தீவு மாவட்ட கடற்பரப்பில் சட்டவிரோதமான முறையில் பல படகுகள் மின் விளக்கைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுவதனால் பல ஆயிரம் கிலோவில் மீன்களை பிடிக்கின்றார்கள். இதனால் சாதாரண மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாகவும் கடல் வளம் அழிக்கப்படுவதாகவும் மீனவ சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் மாவட்டப் பணிப்பாளர் ஆகியோர் அமைச்சரிடம் நேற்றுத் தெரிவித்தனர்.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தில் சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கையைக் கட்டுப்படுத்த பொலிஸாரின் ஒத்துழைப்பும் இராணுவத்தினரின் ஒத்துழைப்பும் தேவை எனவும் நாயாறு புலிபாய்ந்த கல் கடற்கரைப் பகுதியில் இருந்து கொக்குளாய் வரையிலான கடற்கரையோரப் பகுதிகளில் இராணுவத்தின் கண்காணிப்புத் தேவை என்றும் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள உதவிப்பணிப்பாளரால் கடற்றொழில் அமைச்சரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக நாயாறு தொடக்கம் கொக்குளாய் வரையான கடற்பரப்பில் இரவு நேரங்களில் ஒளிபாய்ச்சி மீன்பிடிக்கும் நடவடிக்கை அதிகரித்துள்ளதாகவும் இதனைக் கட்டுப்படுத்த கடற்படையினர் குறிப்பாக வட்டுவாகல் கடற்படைத்தளத்தில் உள்ள கடற்படையினர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அமைச்சரிடம் வலியுறுத்தியுள்ளார்கள்.

இவற்றை நீரியல் வளத் திணைக்களத்தினர், கடற்படை மற்றும் பொலிஸார் இணைந்து கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவருவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு அமைச்சர் வலியுறுத்தினார்.

இந்தக் கலந்துரையாடலில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கு.திலீபன், மாவட்டச் செயலர் அ.உமாமகேஸ்வரன், மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் எஸ்.குணபாலன், மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் பணிப்பாளர், முல்லைத்தீவு மாவட்ட கடற்படைத் தளபதி, மாவட்ட பொலிஸ் பொறுப்பதிகாரி, மாவட்ட இராணுவ அதிகாரி, கடற்படை அதிகாரிகள், மீனவ சங்கங்களின் பிரதிநிதிகள், மீனவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஒ-19)

## வலய ரீதியாக புத்தாண்டு விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப்.19

சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தினரின் ஏற்பாட்டில், தென்மராட்சிப் பிரதேச சமுர்த்தி அலகினர், வலய ரீதியாக புத்தாண்டு விளையாட்டு நிகழ்வை எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடத்தவுள்ளனர்.

கொடிகாமம் சமுர்த்தி அலகின் விளையாட்டுப் போட்டிகள், கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலை மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கும், வரணி சமுர்த்தி அலகின் விளையாட்டுப் போட்டிகள், வரணி மத்திய கல்லூரி மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.30 மணிக்கும், சாவகச்சேரி சமுர்த்தி அலகின் விளையாட்டுப் போட்டிகள், சாவகச்சேரி சமுர்த்தி வங்கி வளாகத்தில் பி.ப. 2 மணிக்கும், கைதடி சமுர்த்தி அலகின் விளையாட்டுப் போட்டிகள், கைதடி மின்னொளி விளையாட்டுக் கழக மைதானத்தில் பி.ப. 2.30 மணிக்கும் நடைபெறுமென அறிவித்துள்ளனர். (ப-9)

## நூலக அங்கத்தவராக அனுமதி இலவசம்

காரைநகர், ஏப். 19

வடக்கு மாகாண ஆளுநரின் அனுமதியின் பிரகாரம், காரைநகர் பிரதேசசபையின் வடக்கு மற்றும் தெற்கு உப அலுவலக நூலகங்களில், கட்டணமின்றி இலவசமாக நூலக அங்கத்தவராக இணைந்து கொள்ள முடியுமெனக் காரைநகர் பிரதேச சபைச் செயலாளர் கி.விஜயேஸ்வரன் தெரிவித்தார். (ப-66)

## கல்வி அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு

சாவகச்சேரி, ஏப்.19

தென்மராட்சிப் பிரதேச சமுர்த்தி அலகால், அந்தப்பிரதேசத்தைச் சேர்ந்த சமுர்த்திப் பயனாளிகளின் பிள்ளைகளினது கல்வி அபிவிருத்திக்காக 12 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்குத் தலா 2 ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-9)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.19

யாழ்.குப்பிழான் விக்கினேஸ்வரா மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் பொதுக் கூட்டம், அதிபர் தலைமையில் பாடசாலை பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. (எ-66)



## பிரதிப் பொலிஸ்மா அதிபர் சிவில் சமூகத்துடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஏப்.19

புதிதாகப் பதவி ஏற்றுள்ள யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் காளிங்க ஜெயசிங்க, அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் சென்று அங்குள்ள சிவில் சமூகப் பிரதிநிதிகளுடன் சந்திப்புகளை மேற்கொண்டுள்ளார்.

பருத்தித்துறை பொலிஸ் நிலைய சிவில் சமூகத்தினரை அவர் நேற்று முன்தினம் புதன்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினார். போதைப் பொருள் பாவனை, மணல் கடத்தல், கொள்ளை மற்றும் களவு என்பன கலந்துரையாடப்பட்டன.

பொதுமக்களின் பாதுகாப்புத் தொடர்பில் கவனம் செலுத்துவதாகவும், குற்றச்செயல்கள் தொடர்பில் தகவல் வழங்கும் பட்சத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார். (எ-100)

## கடம்பேசுவரனின் மறைவு தமிழ் உலகுக்குப் பேரிழப்பு

### அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.19

சைவத்தமிழ் மரபில் தமிழ்ப் பண்டிதர்களையும், சைவப்புலவர்களையும் உருவாக்கிய பெருமகனார் பண்டிதர் ம. ந.கடம்பேசுவரன் தமது இவ்வுலக வாழ்வை நிறைவு செய்து கொண்டார். பண்டிதர் ம.ந.கடம்பேசுவரனின் மறைவு சைவத்தமிழ் உலகுக்குப் பேரிழப்பாகும்.

-இவ்வாறு அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் செயலாளர் சைவப்புலவர் செ.த.குமரன் தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் விடுத்துள்ள இரங்கல் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழ் மூச்சே உயிர்மூச்சு என்ற அசையாத நம்பிக்கையோடு சங்கத்தைத் திறம்பட வழிநடத்திப் பண்டிதர் மரபை நம் மண்ணுக்கு அளித்த பெருமகனார். நீண்டகாலமாக சைவப்புலவர் பட்டப் பரீட்சைக் குழுவில் இலக்கண வினாத்தாள் தயாரிப்பாளராக, மதிப்பீட்டாளராக நடுநிலையுடன் இரகசியத் தன்மையுடன் பணியாற்றி, சைவப்புலவர் சங்கத்தின் மூத்த சைவப் புலவர்களால் நன்மதிப்பைப் பெற்றவர். பல தசாப்தங்களில் புலமையையும், தமிழ் மரபுக் கல்வியையும் கடத்தி வந்த, காவி வந்த, தொடரின் ஒரு பெரும் அத்தியாயம் இவர். ஈழத்து மரபுத்தமிழ் கல்வி வரலாற்றில் அழித்து விட முடியாத எங்கள் பண்டிதர் ஐயாவுக்கு அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் சார்பில் அஞ்சலிகளைச் செலுத்தி நிற்கின்றோம். அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நிற்கின்றோம் - என்றுள்ளது. (ப-66)

## அரச நடன விழாவுக்கு விண்ணப்பம் கோரல்

சமய, கலாசார அலுவல்கள் அமைச்சு மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் ஆகியவற்றின் அனுசரணையுடன் நடத்தப்படவுள்ள அரச நடன விழாவுக்கான விண்ணப்பங்களை, சுற்றுநிருபத்துக்கமைவாக இறுவெட்டுடன் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் ஒப்படைக்க வேண்டும் என்று தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினர் அறிவித்துள்ளனர். (எ-9)

## வருடாந்த மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஏப். 19

மூளாய் வதிரன்புலோ ஸ்ரீசித்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

பன்னிரு தினங்கள் கொண்ட உற்சவத்தில் நாளை சனிக்கிழமை கப்பல் திருவிழாவும், எதிர்வரும் 22ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை 5 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன என்று ஆலய பரிபாலனசபை அறிவித்துள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீள்குடியேற்றம்...

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. இதன்போதே ஆளுநர் இவ்வாறு தெரிவித்தார்.

ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த வருட இறுதிக்குள் மீள்குடியேற்ற நடவடிக்கை நிறைவு செய்யப்படவேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இறுக்கமான பணிப்புரை வழங்கியுள்ளார். அதற்கேற்ப நடவடிக்கைகள் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

யாழ். மாவட்டத்தில் 1500 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள், நண்பர்கள் மற்றும் உறவினர்களின் வீடுகளில் தங்கியுள்ளனர். அவர்களை மீள்குடியேற்றுவது தொடர்பில் விசேட கூட்டம் நடத்தப்படவேண்டும். அத்துடன் ஏற்கனவே மீள்குடியேற்றப்பட்ட மக்களின் வீடுகளுக்கான மின்சார விநியோகம் தொடர்பில் துரித நடவடிக்கை எடுக்குமாறு துறைசார் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**காணி உறுதிகளை கைமாற்றத் தடை**

வடக்கு மாகாணத்தில் காணி உறுதிப்பத்திரங்களைக் கைமாற்றும் செயற்பாடுகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன. 'உரித்து' காணி உறுதிகளை வழங்கும் நடவடிக்கையைத் துரிதப்படுத்துவதற்காக இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கமைய மே மாத நிறைவுக்குள் வடக்கு மாகாணத்தில் 60 ஆயிரம் பேருக்கான காணி உறுதிப் பத்திரங்கள் கையளிக்கப்படவுள்ளன. வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படவுள்ள வீட்டுத்திட்டம் தொடர்பான கலந்துரையாடல்கள் மற்றும் திட்டமிடல்கள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளன. இந்தத் திட்டத்தில் நெடுந்தீவு மக்களுக்கான 76 வீடுகளும் உள்வாங்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு துறைசார் திட்டங்களும் வலயங்களாகப் பிரிக்கப்பட்டு பொதுமக்கள் இலகுவில் அணுகக்கூடிய வகையில் மேம்படுத்தப்படவேண்டும். பொதுமக்களுக்கு வீண் அலைச்சலைத் தவிர்க்கக்கூடிய வகையில் அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படவேண்டும் - என்றார்.

(அ-ம-26)

## ஈரான்...

'உமாஓயா' பல்நோக்கு அபிவிருத்தித் திட்டத்தை அங்குரார்ப்பணம் செய்வதற்கு ஈரான் ஜனாதிபதி இலங்கை வரவுள்ள நிலையில், அதற்கு அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர் என வெளியாகும் தகவல்கள் தொடர்பிலேயே விமல் வீரவன்ஸ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

'உமாஓயா' திட்டத்துக்கு ஈரான் உதவியுள்ளது. ஒரு நாட்டின் அபிவிருத்தித் திட்டத்துக்கு உதவி வழங்கினால் அதன் திறப்பு விழாவில் குறித்த நாட்டின் தலைவருக்கு பங்கேற்க உரிமை உள்ளது. எனவே, நீங்கள் கூறுவதுபோல் அமெரிக்கா அழுத்தம் கொடுத்திருந்தால் பயணம் இறுதிநேரத்தில் இரத்து செய்யப்படலாம் - என்று விமல் வீரவன்ஸ குறிப்பிட்டார்.

'இலங்கை வருமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கதான் அழைப்பு விடுத்திருந்தார். ஆக எப்படி மறுபடி வரவேண்டாம் எனக் கூறமுடியும்?' என எழுப்பப்பட்ட கேள்விக்கு,

"இலங்கையை ஜனாதிபதிதான் ஆள்கின்றார் என யார் சொன்னது? சர்வதேச நாணய நிதியமும், அமெரிக்கத் தூதரகமும்தான் ஆள்கின்றன. அவற்றுக்குத் தேவையான முடிவுகளே எடுக்கப்படும். மறைக்கப்பட்ட 9 உண்மைகள் தொடர்பில் நான் புத்தகமொன்றை எழுதினேன். அதில் நாடு அராஜக நிலைக்குச் செல்வதற்கு அமெரிக்கத் தூதுவரின் ஆலோசனையின் பிரகாரம் சவேந்திர சில்வா, கமால் குணரத்ன, சுரேஷ் சாலே, முன்னாள் பொலிஸ்மா அதிபர் ஆகியோர் ஒத்துழைப்பு வழங்கினர் எனத் தகவல் வெளியிட்டிருந்தேன்.

முன்னாள் பொலிஸ்மா அதிபருக்குப் பல தடவைகள் சேவைக்கால நீடிப்பு வழங்கப்பட்டது, சவேந்திர சில்வா, சாலே ஆகியோர் இன்னும் பதவிகளில் நீடிக்கின்றனர். இப்படியான நாடுதான் எமது நாடு. அரச விரோத செயல் நடந்துள்ளது என்பது ஜனாதிபதிக்கும் தெரியும். எனினும், சர்வதேச நாணய நிதியத்திட்டம் வெற்றியளிக்க வேண்டுமெனில் இவர்கள்மீது கைவைக்கமுடியாது" - என்று விமல் வீரவன்ஸ பதிலளித்தார்.

(அ-ம-44)

## 131,652...

அரிசி வழங்கும் திட்டம் வரவேற்கப்படவேண்டியது. எனினும், இந்த அரிசி ஏழைகளுக்கு முறையான வகையில் சென்றுசேருமா? அதற்கு என்ன உத்தரவாதம்? செல்வந்தர்களும் அரசாங்கத்தின் மானியத் திட்டங்களையும், இலவசத் திட்டங்களையும் முறையற்று அனுபவிக்கின்றனர்' என்ற குற்றச்சாட்டை முன்வைத்தார்.

இதையடுத்து, "இந்தத் திட்டத்துக்காகத் தெரிவுசெய்யப்பட்ட குடும்பங்களின் விவரங்கள் அந்தந்தப் பிரதேச செயலகங்களுக்கு முன்னால் காட்சிப்படுத்தப்படும். அது தொடர்பில் அதிருப்திகள் இருந்தால் பொதுமக்கள் தெரியப்படுத்தலாம்" என்று அமைச்சர் டக்ளஸ் சுட்டிக்காட்டினார். 'உடனடியாக நடைமுறைக்கு வரும்வகையில் நாளையே (இன்று) இந்தப் பட்டியல் காட்சிப்படுத்தப்படவேண்டும்' என்றும் அவர் இறுக்கமாக அறிவுறுத்தினார்.

இலவச அரிசித் திட்டத்துக்கு, 'அஸ்வெசும' பயனாளிகள், சமூர்த்தி நிவாரணம் பெறும் பயனாளிகள், முதியோர்க் கொடுப்பனவு பெறும் பயனாளிகள், மாற்றுத்திறனாளிகள் கொடுப்பனவு பெறும் பயனாளிகள், சிறுநீரகக் கொடுப்பனவு பெறும் பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

திட்டத்துக்குத் தேவையான அரிசிகளை 21 ஆலைகளில் இருந்து பெறுவதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதாகவும், தரமான அரிசியை வழங்குவது தொடர்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் ம. பிரதீபன் இதன்போது தெரிவித்தார்.

(அ-ம-26)

## மாணவர்கள்...

மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போதே உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளுக்கு முன்பாக, பாடசாலைகள் ஆரம்பமாகும் மற்றும் நிறைவடையும் நேரங்களில் கனரக வாகனங்கள் அதிவேகமாகப் பயணிக்கின்றன. இதனால் பெரும் துன்பங்களையும் நெருக்கடிகளையும் மாணவர்கள் எதிர்கொள்ள நேரிடுகின்றது என்று சுட்டிக்காட்டப்பட்டதையடுத்தே இந்தத் தடை நடைமுறைக்கு வந்ததுடன், வீதிப் போக்குவரத்தைக் கண்காணிக்கும் அதிகாரிகள் அதிக அக்கறையுடன் செயற்பட்டு, மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது. அத்துடன் இ.போ.ச. மற்றும் தனியார் பேருந்துகள் போட்டியிட்டுக் கொண்டு ஓடுவது தவிர்க்கப்பட வேண்டும் என்றும் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் கோரப்பட்டது.

(அ-ம-27-26)

## அபிவிருத்தித்...

யாடல் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது, யாழ்ப்பாணம் - செம்மணிப் பகுதியில், விளையாட்டு வளாகம் மற்றும் உட்புறப் பொழுதுபோக்கு வசதிகளுக்காக 30 ஏக்கர் நிலப்பரப்பு அடையாளம் காணப்பட்டுள்ள விடயம் சபைக்குத் தெரியப்படுத்தப்பட்டபோதே, "யாழ்ப்பாணம் நகரப் பகுதியை மட்டும் மையப்படுத்தி முதலீட்டு வலயங்களை உருவாக்காமல் தீவகம் உள்ளிட்ட பல பகுதிகளுக்கும் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் பட்சத்தில்தான் பரந்துபட்ட வளர்ச்சியை எதிர்பார்க்கமுடியும்" என்று நாடாளுமன்ற உறுப்பினரான சி.சிறீதரனும், வடமாகாண அவைத்தலைவர் சி.வீ.கே.சிவஞானமும் தெரிவித்தனர்.

"அல்லைப்பிட்டி, மண்டைதீவில் தேவையான இடங்கள் உள்ளன. அங்கு முதலீட்டு வலயங்களை அடையாளம்கண்டு அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். அப்போது அந்தப் பகுதிகள் அபிவிருத்தி அடையும். போக்குவரத்துகளும் மேம்படும்" என்று அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

(அ-ம-26)

## கடற்றொழிலாளி...

தீவு, மாத்தளன் பகுதியில் தங்கிநின்று கடற்றொழில் செய்து வந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு கடற்றொழிலுக்குச் சென்ற நிலையில் அவர் கரை திரும்பவில்லை. அவரைத் தேடி ஏனைய படகில் மீனவர்கள் சென்றபோது அவர் படகில் உயிரிழந்த நிலையில் காணப்பட்டுள்ளார். பொலிஸாரால் சடலம் மீட்கப்பட்டு முல்லைத்தீவு மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(அ-ச-19)

## ஹெரோய்னுக்குப்..

பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் தற்போது 'யுக்திய' சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதனால் ஹெரோய்ன் பாவனை ஓரளவு கட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்துக்கு ஹெரோய்ன் சடுதியாகக் கடத்தப்படுவது மிகையாகவே குறைந்துள்ளதாகச் சொல்லப்படும் பின்னணியில், ஹெரோய்னுக்கு அடிமையானவர்கள் பதில் பொருளாக மனவழுத்தத்துக்குப் பயன்படுத்தும் மாத்திரைகளை உட்கொண்டுவருகின்றனர். மனவழுத்தத்துக்குப் பயன்படுத்தும் மாத்திரைகளுக்குத் தட்டுப்பாடுகள் ஏற்படும் அளவுக்கு மருத்துவக் காரணங்களுக்கு அப்பாற்பட்ட அதன்பாவனை அதிகரித்து[illegible] என்றும் ஒருங்கிணைப்புக் கு[illegible]த்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-ம-26)

## இன்று...

இந்திய மக்களவைத் தேர்தல் வழக்கம் போல கட்டம்கட்டமாக நடத்தப்படவுள்ளது. முதலாவதாக தமிழகத்தில் இன்றையதினம் வாக்குப்பதிவுகள் இடம்பெறவுள்ளன. தமிழகத்தில் 40 தொகுதிகளில் இம்முறை நான்கு முனைப் போட்டி நிலவுகின்றது.

தி.மு.க., பா.ஜ.க., நாம் தமிழர் மற்றும் அ.தி.மு.க. கட்சிகளில் எந்தக் கட்சி பெரும்பான்மை பெறும் என்பது தொடர்பில் கணிக்கமுடியாத நிலை காணப்படுகின்றது. திராவிடக் கட்சிகளுக்குச் சவால் விடக்கூடிய வகையில் பா.ஜ.க. இம்முறை வரலாற்று எழுச்சியைப்பெறும் என்று ஊகிக்கப்பட்டுள்ள பின்னணியில் இடம்பெறும் இந்தத் தேர்தல் பலத்த எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தியுள்ளது. (அ-ம)

## ரணில்...

அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வஜிர அபேவர்த்தன மேலும் தெரிவித்ததாவது:-

"ஒக்ரோபர் 17 ஆம் திகதிக்கு முன்னதாக அரசமைப்பில் உள்ள ஏற்பாட்டுக்கமைய ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும். மக்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் அதேபோல நிராகரிக்கும் உரிமை நாட்டு மக்களுக்கு உள்ளது. ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் நடைபெறும் பொதுத்தேர்தலின்போது மக்கள் அதனைச் செய்யலாம். 225 நாடாளுமன்ற உறுப்பினர்களையும்கூட வேண்டுமென்றால் நிராகரிக்கலாம். ஆனால், ஜனாதிபதித் தேர்தலை எதிர்ப்பை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பாகப் பயன்படுத்தக்கூடாது.

ஏனெனில் வீழ்ந்த நாட்டை மீட்டெடுத்து வரும் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறவேண்டும். உலகில் நாடொன்று வங்குரோத்தடைந்தால் மீண்டுவர 8 முதல் 10 ஆண்டுகள்வரை செல்லும். எனினும், குறுகிய காலப்பகுதிக்குள் வங்குரோத்து அடைந்த எமது நாட்டை சீரான நிலைக்கு ஜனாதிபதி கொண்டுவந்துள்ளார். மே நடுப்பகுதியளவில் நாடு வங்குரோத்து நிலையில் இருந்து முழுமையாக மீண்ட பின்னர் நிறுத்தப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள், வேலைத்திட்டங்கள் மீள ஆரம்பிக்கப்படும் - என்றார்.

(அ-ம-44)

## கணவனின்...

மேற்படி நபர் மாரடைப்புக் காரணமாக உயிரிழந்ததையடுத்து, அவர் உயிரிழந்த தகவல் மனைவிக்குத் தெரியப்படுத்தப்பட்டதையடுத்து தனது வீட்டில் தவறான முடிவெடுத்து மனைவியும் உயிரிழந்துள்ளார். இவர்களுக்கு பதின்ம வயதுடைய இரு பெண் பிள்ளைகள் உள்ளனர். சம்பவம் தொடர்பில் நெடுங்கேணிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(அ-ம-18-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சாப்பை நேற்று வீழ்த்தியது மும்பை



**பஞ்சாப், ஏப். 19**

**ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் பஞ்சாப்பை பெரும் போராட்டத்தின் மத்தியில் வீழ்த்தி வெற்றிபெற்றது மும்பை.**

**முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை அணிக்கு ஆரம்ப வீரர் இஷான் கிஷான் வெறும் 8 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார்.**



அதன்பின்னர் ரோகித், சூரியகுமார் இருவரும் நீண்டநேரம் நிலைத்துநின்று அணியைப் பலப்படுத்தினார்கள். இணைப் பாட்டமாக 80 ஓட்டங்களை இருவரும் பகிர்ந்து கொண்டனர். 36 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ரோகித் ஆட்டமிழந்தார். ஆரம்பத்தில் காட்டிய அதிரடியை சூரியக்குமாரால் தொடர முடிய வில்லை. அவர் அரைச்சதம் கடந்தாலும் ஒரு கட்டத்தில் மந்தமான ஆட்டத்தையே வெளிப்படுத்தினார். 53 பந்துகளில் 78 ஓட்டங்களை சூரியக்குமார் பெற்றார். உண்மையில் கிட்டத்தட்ட 10 தொடக்கம் 15 ஓட்டங்களை அவர் கூடுதலாகப் பெற்றிருக்க வேண்டும். திலக் வர்மா 18 பந்துகளில் 34 ஓட்டங்களையும், ரிம் டேவிட் 7 பந்துகளில் 14 ஓட்டங்களையும் பெற முடிவில் 192 ஓட்டங்களை மும்பை அணி பெற்றது.

பதிலுக்குக் களமிறங்கிய பஞ்சாப் அணிக்கு முன்வரிசை பலவீனமான ஆட்டத்தையே வெளிப்படுத்தியது. சாம்கரன் 6, பிரம்சிம்ரன் சிங் பூச்சியம், றொசொவ் 1, லிவிங்ஸ்ரன் 1 என அடுத்தடுத்து ஆட்டமிழக்க 14 ஓட்டங்களில் 4 இலக்குகளை இழந்து தவித்தது பஞ்சாப். அணி 100 ஓட்டங்களைத் தொடுவதே சந்தேகம் என்றிருக்கையில் ஷசாங் சிங் மற்றும் அஷ் தோஸ் சர்மா இருவரும் எழுச்சியான ஆட்டத்தை வழங்கினார்கள். 25 பந்துகளில் 41 ஓட்டங்களைக் குவித்தார் ஷசாங் சிங். 7 சிக்சர்கள் அடங்கலாக 28 பந்துகளில் 61 ஓட்டங்களைச் சேர்த்தார் அஷ்தோஸ் சர்மா. இறுதி இரண்டு ஓவர்களில் 20 ஓட்டங்களைப் பெறவேண்டும் என்ற நிலையில் இலக்குகள் கைவசம் இல்லாமல் பஞ்சாப் தடுமாறியது. இறுதி நம்பிக்கையாகக் களத்தில் நின்ற ரபாடா ரண்அவுட் செய்யப்பட 183 ஓட்டங்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 9 ஓட்டங்களால் தோல்வியடைந்தது பஞ்சாப். (ம)

## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஏப். 19

ஏழாலை பைவ் ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் சித்திரைப் புத்தாண்டு விளையாட்டு விழா, பைவ் ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்று வெள்ளி, நாளை சனி ஆகிய இரு தினங்களிலும் மாலை 4.30 மணி முதல் இரவு 7 மணி வரை இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து நாளைமறுநாள் ஞாயிற்றுக் கிழமை காலை 6 மணிக்கு 15 வயதுக் குட்பட்டவர்களுக்கான குறுந்தூர மரதன் ஓட்டப்போட்டி நடைபெறுமென விளையாட்டுக்கழக நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (ப-66)

## கிணற்றிலிருந்து சடலம் மீட்பு!



யாழ்ப்பாணம், ஏப். 19

இளம் குடும்பப் பெண்ணொருவர் கிணற்றுக்குள் இருந்து நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மாதகல் , சகாயபுரம் பகுதியைச் சேர்ந்த பிரதீபன் நித்தியா (வயது-37) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார். இரண்டு பிள்ளைகளின் தாயான இவர் வலி. தென்மேற்கு பிரதேசசபையின் பண்டத்தரிப்பு உப அலுவலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமை புரிந்து வருகின்றார். அவர் வலிப்பு நோயால் பாதிக்கப்பட்டிருந்தார் என்று குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

இறப்பு விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-27)

## படகில் பிரசவம் நடந்தது என்ன?

### யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை விளக்கம்

யாழ்ப்பாணம், ஏப். 19

உதயனின் நேற்றைய பதிப்பில், 'நயினாதீவு கர்ப்பிணி கடல்நடுவே பிரசவம்' என்ற தலைப்பின் கீழ் செய்தி வெளியாகியிருந்தது. அந்தச் செய்தியில், பிரசவ வலியேற்பட்டு நயினாதீவு மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட கர்ப்பிணி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு படகுமூலம் மாற்றப்பட்டார். அம்புலன்ஸ் படகு பழுதடைந்துள்ளதால் பயணிகள் படகிலேயே அவர் கொண்டுவரப்பட்டார். கடல்நடுவே பிரசவ வலி அதிகரித்ததைத் தொடர்ந்து படகிலிருந்த ஆண்கள் மேல் தளத்துக்கு அனுப்பப்பட்டு படகிலிருந்த பெண்களால் பிரசவம் பார்க்கப்பட்டது என்றவாறாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த விடயத்தில் உண்மையில் என்ன நடந்தது என்ற விடயங்களை, யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் விளக்கியுள்ளார். அந்த அறிக்கையில்,

குறித்த கர்ப்பிணிப் பெண் நயினாதீவு மருத்துவமனையில் இருந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு இடமாற்றம் செய்யப்பட்டபோது படகில் கடமையிலிருந்த மருத்துவ அதிகாரியும், குடும்பநல மருத்துவ உத்தியோகத்தரும் அந்தப் பெண்ணுடன் பயணப்பட்டனர். பொதுப்பயணிகள் அந்தப் படகில் பயணப்படுவதில்லை. அத்துடன் அந்தப் பெண்ணுக்கு மருத்துவ அதிகாரியும், குடும்பநல மருத்துவ உத்தியோகத்தருமே பிரசவம் பார்த்தனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

கடைக் கட்டடம் வாடகைக்குண்டு



கைதடியில் BOC வங்கிக்கு மேல் தளத்தில் அமைந்துள்ள கடைக் கட்டடம் வாடகைக்கு உண்டு.
நிறுவனங்கள், அலுவலகங்கள் நடத்துவதற்கு உகந்த இடம்.
தொடர்பு: 077 407 0730, 074 301 5921, 0041 7938 612 53

பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை
இடம் :- மந்திகை
அங்கர் பாதுகாப்பு சேவை நிறுவனம்.
077 539 6350

வங்கி மீதி வசதிகள் மற்றும் விசா ஆலோசனை
சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show Money) வசதிகள்.
தொடர்புகளுக்கு:
074 173 7684

வேலை ஆட்கள் தேவை
பண்ணை வேலைக்கு ஆள் தேவை. சம்பளமாக சுமார் 55000/= வீடு கொண்டு செல்லக்கூடியதாகவும் EPF & ETF முழுவதும் எம்மால் செலுத்தப்படுவதுடன் உணவும் எம்மால் வழங்கப்படும். (தங்கி நின்று வேலை செய்வதுடன் மாத விடுமுறையில் வீடு சென்று வரலாம்)
தொடர்பு: 077 127 8122

தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், கணிய அளவையாளர்கள், மேசன் தொழிலாளர்கள் உப ஒப்பந்தகாரர்கள் தேவை
பிரபல கட்டுமான நிறுவனமான கதிர் இன்ஜினியரிங் கொன்ஸ்ட்ரக்சன் நிறுவனத்திற்கு பருத்தித்துறையில் மேற்கொள்ளப்பட்டுவரும் கட்டுமான வேலைக்கு தகுதியான தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள், கணிய அளவையாளர்கள், மேசன் தொழிலாளர்கள் உப ஒப்பந்தகாரர்கள் தேவைப்படுகின்றனர்.
தொடர்பு: 077 2417 103



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.04. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.